Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC .No.65 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO. 1**

| | | | |
|---|---|---|---|
| Name: | அனிதா | Calling: | இல்லதரசி |
| Husband's Name: | மாதேஷ்வரன் | Religion: | |
| Village: | ராமநாயக்கன்பேட்டை | Age: | 34 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.10.2025

( எதிரிகள் ஆஜர் .)

அ.சா.1 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் எனது முதன்மை விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் எனது புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். நான் எட்டாம் வகுப்பு படித்துள்ளேன். ஆவாரங்குப்பத்தில் இருந்து புத்துக்கோவிலுக்கு செல்லும் ரோட்டில் உள்ள மெர்குரி லைட் எனும் இடத்தில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது அந்த பகுதி இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எனது வீடு ஆவாரங்குப்பத்தில் இருந்து புத்துக்கோவிலுக்கு செல்லும் வழியில் தெற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். ஆவாரங்குப்பத்தில் இருந்து புத்துக்கோவிலுக்கு செல்லும் வழியில் முதலில் சூரியகுமார் மளிகை கடை, அடுத்து விநாயக பேக்கிரி கடை, எ.டி.எம் சென்டர், நாராயணசாமி வீடு அதன் பிறகு என்வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிடம் இரண்டு அறைகள் உள்ளது அதில் ஒன்று பேன்சி ஸ்டோர், மற்றொன்று வீட்டிற்கு செல்லும் வாசல்படி என்றால் சரிதான். புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே மதி டீக்கடை உள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி வீட்டு வாசப்படியும் என்வீட்டு வாசப்படியும் ரோட்டை அணைத்து உள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி வீட்டில் சி.சி.டி.வி கேமரா இருதிசையிலும் உள்ளது என்றால்

சரிதான். அதே போல் எ.டி.எம். சென்டரிலும் சி.சி.டி.வி கேமரா இருதிசையிலும் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின் போது 19.04.2024 இரவு 09.00 மணிக்கு எனது வீட்டின் அருகே எனது கணவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் சொல்லிதான் என் வீட்டுகாரர் சம்பவயிடம் வந்தார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி தி.மு.க கட்சியில் அரசியல் பிரமுகராக உள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி எங்களுக்கு வேண்டப்பட்டவர் என்றால் சரிதான். 19.04.2024 ம் தேதி எம்.பி. தேர்தல் என்பதால் என்வீட்டிற்கு எதிரே உள்ள அரசு பள்ளியில் தான் வாக்குப்பெட்டிகளை வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். ஓட்டு போட்டப்பின்பு வாக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்ல போலிசார்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான்கு எதிரிகளும் நான்கு இருசக்கரவாகனத்தில் தான் வந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் விடுதலை சிறுத்தை கட்சிக்காக பெட்டிகளை ஏற்ற வந்தார்கள் என்றால் சரிதான். என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் புதிய காலனியை சேர்ந்த பொதுமக்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட சுமார் 100 நபர்களுக்கு தன் வீட்டிடம் வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வரும் போது புதிய காலனியை சேர்ந்த பெண்கள் சிவரஞ்சினி, லட்சுமி, இந்திரராணி, சகுந்தலா, சரசா, இனிபோதம் ஆகியோர்கள் வந்தார்களா என்றால் பெயர் தெரியாது ஆனால் கூட்டமாக வந்தார்கள். அவர்கள் என் வீடு ஏறி வந்து என்னையும், என் கணவரையும், என் மாமியாரையும் தாக்கினார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் வீட்டின் கேட்டிற்குள் நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் இருட்டாக இருந்ததால் அங்கிருந்த பெண்கள் தன் வீட்டிற்குள் நுழைந்து என்னையும், என் கணவரையும், என் மாமியாரையும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல, பெண்கள் அடிக்கவில்லை ஆண்கள் தான் அடித்தார்கள். அப்போது எனக்கு முகம், தலை அடிப்பட்டது என்றால் பட்டது. ( இந்த கேள்வியை கேட்கும் போது சாட்சி தனது முதுகை காண்பித்து அடித்ததாகவும், மேலும் தனது மார்ப்பகத்தை பிடித்து இழுத்தார்கள் என்றும் மார்பு பகுதியில் உள்ள நைட்டியை பிடித்து இழுத்தார்கள் என்றும் சிறிது கண்கலங்கி கூறினார்.) அப்போது எனக்கு இரத்தம் வந்து என்னுடைய நைட்டியெல்லாம் நனைந்து விட்டது என்றால் சரிதான். இரத்தம் படிந்த நைட்டியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை, மூன்று நாட்களாக அதே நைட்டியில் தான் இருந்தேன்,போலிசார் அதை பார்த்தனர். சம்பவத்தில் நான் மயக்கமடைந்தபோது எவ்வளவு நேரம் நான் மயக்கநிலையில் இருந்தேன் என்றால் இரண்டு மணிநேரமாக இருந்தேன். முதலில் நான் முதல் சிகிச்சைக்காக இராமநாயக்கன் பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இல்லை, 108 ஆம்புலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு தான் வந்தோம். 108 ஆம்புலன்ஸை கிருஷ்ணமூர்த்தி என்பவர் தான் அழைத்தார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது கிருஷ்ணமூர்த்தி எதிரி தரப்பில் இருவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில்

உள்நோயாளியாக அனுமதித்த நிலையில் நீங்களும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று அட்மிட் ஆகும் படி கூறினார் என்றால் சரியல்ல, எங்களுக்கு தான் அடிப்பட்டது, அதனால் தான் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமணியல் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். என்ன என்ன நடந்தது என்று கேட்டுக்கொண்டு எழுதிக்கொண்டு வெற்றுதாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, எழுதப்பட்ட ஒரு தாளில் மட்டும் தான் கையெழுத்து வாங்கினார்கள். எழுதப்பட்ட தாளில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நாங்கள் கூறியதை தான் அவர்கள் எழுதினார்கள். நான் எனது முதன்மை விசாரணையில் கூறிய சங்கதிகளை தவிர்த்து வேறு ஏதேனும் எனது புகாரில் இருந்தால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான், ( சிறிது நேரம் கழித்து சாட்சி, வீட்டிடம் எனது அண்ணணிடம் ஏதேனும் விசாரித்து இருப்பார்கள், அவர் கூட ஏதேனும் சொல்லியிருக்கலாம்.) என் அண்ணன் பெயர் என்னவென்றால் அன்பு. அவர் தான் போலிசாரிடம் நடந்த விவரங்களை கூறினார் என்றால் சரிதான், பக்கம் அக்கம் இருப்பவர்களும் கூறினார்கள். பக்கம் அக்கம் இருப்பவர்கள் பெயர் என்னவென்றால் சூரியகுமார், சக்திவேல், முரளி. என் வீட்டுகாரரின் பனியனை பிடித்து இழுத்து கிழித்ததை நான் போலிசாரிடம் சொன்னேனே என்றால் சொன்னேன். அதை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் காண்பித்தோம், கொடுக்கவில்லை. என் கணவரை முதுகின் மீது எதிரிகள் நால்வரும் நான்கு இரும்பு ராடால் அடித்ததை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். என் மச்சினனை எதிரிகள் நால்வரும் கை, கால் ,உடல் மீது கையால் அடித்த விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அடித்த நான்கு எதிரிகளின் பெயர், தகப்பன் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மருத்துவமணையில் சிகிச்சைக்கு சேரும் போது சுயநினைவுடன் இருந்தேனா என்றால் இருந்தேன். மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நான்கு பேர் என்னை கையால் அடித்தாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அடி அதிகமாகபட்டது என் கணவருக்கு தான் என்றால் அதிகமாக அல்ல, எனது மாமியார், எனது மச்சினர், மாமனார்க்கு தான் அதிகமாக அடிப்பட்டது, உள்காயம் அதிகமாக ஏற்பட்டது. என் மாமியாருக்கும் மாமனாருக்கும் தான் இரத்தம் வந்தது. எனக்கு நெஞ்சு பகுதியில் உள்காயம் ஏற்பட்டு இன்று வரை நான் வேலைக்கு செல்ல இயலவில்லை. எதிரிகள் அனைவரும் தேர்தல் என்பதால் என்வீட்டிற்கு முன் நின்றுக்கொண்டிருந்தார்கள் என்றாலும் அப்போது என் கணவர் எதிரிகளின் சாதிபெயரை சொல்லி திட்டியதால் தான் அங்கிருந்த பகுதி மக்கள் வந்து அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதிலிருந்து தப்பிக்க தான் எதிரிகள் மீது பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த புகாரை கிருஷ்ணமூரத்தி சொல்லிதான் நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல, நானே தான் கொடுத்தேன். கிருஷ்ணமூர்த்திக்கும் எதிரிக்கும் உள்ள அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக தான் இப்புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும்

என்னை அடிக்கவில்லை என்றாலும் திட்டவில்லை என்றாலும் சரியல்ல, அடித்தார்கள். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் கிருஷ்ணமூர்த்திக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அனிதா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC .No.65 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO. 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | மனோகரன் | Calling: | வனதுறை ஓய்வு |
| Husband's Name: | முனிசாமி | Religion: | |
| Village: | ராமநாயக்கன்பேட்டை | Age: | 67 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.10.2025

( எதிரிகள் ஆஜர் .)

அ.சா.2 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இதற்கு முன்பு நீதிமன்றத்தில் கூறிய முதன்மை விசாரணையில் கூறியதைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் ஆமாம்.அடிப்பட்டு எவ்வளவு நேரத்தில் என் மகன் வீட்டிற்கு சென்றேன் என்றால் கால் மணிநேரத்தில் சென்றுவிட்டேன். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது அங்கு நூறு நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் அவ்வளவு இருந்திருக்க மாட்டார்கள், ஒரு அறுபது எழுபது பேர் இருந்திருப்பார்கள். அதில் பெண்கள் மூப்பது பேர் இருந்திருப்பார்கள் என்றால் இருந்திருப்பார்கள். எனக்கு ஏற்கனவே விபத்து ஏற்பட்டு கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நான் வந்து பார்க்கும் போது என் மனைவி பேச்சுமூச்சி இல்லாமல் கீழே மயக்கமாக இருந்தார் என்றால் அடிப்பட்டு கீழே இருந்தார், புடவை எல்லாம் இல்லாமல் இருந்தார். என் மனைவி ஏற்கனவே உடல் நலம் சரியல்லாதவர் என்றால் கார் விபத்து ஏற்பட்டு உடல் நலம் சரியில்லாமல் இருந்தார். போலிசார் என் பெயர், முகவரி ஆகியவற்றை கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றாலும் தனியாக ஏதும் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் வாக்குமூலம் ஏதும் பெறவில்லை,

வாணியம்பாடி SI வேலூரோ, திருப்த்தூரோ தெரியவில்லை, ஒரு பெரிய மேடம் ஒருத்தரும் வந்து விசாரணை செய்தார்கள், நாங்கள் சொல்ல சொல்ல அவர்கள் எழுதிக்கொண்டார்கள். அதில் தான் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான், படித்துக்காண்பித்து பிறகு கையொப்பம் செய்தோம். படித்து காண்பித்ததில் நான் எனது முதன்மை விசாரணையில் கூறிய சங்கதிதான் அதில் இருந்தது என்றால் சரிதான். வேறு சங்கதிகள் கொண்ட வாக்குமூலம் இருந்தால் அது நான் கொடுத்த வாக்குமூலம் இல்லை என்றால் சரிதான். வேலூரில் இருந்து வந்த அதிகாரி ஜாதி கலவரம் நடந்துவிட கூடாது என்பதற்காக தான் வந்தார் என்றால் எங்களை கைது பண்ண கூறி ராமநாயக்கன்பேட்டை, மல்லக்குப்பம், தெக்குப்பட்டு, கேதாண்டபட்டியில் உள்ள ஊர் மக்களை திரட்டிக்கொண்டு அம்பலூர் காவல் நிலையத்தில் போராட்டம் செய்ததால் தான் அந்த அதிகாரி வேனில் வந்தார்கள். நான்கு ஊர்காரர்கள் மொத்தமாக சேர்ந்து தான் போராட்டம் செய்து அடிக்கவந்தார்களா என்றால் அவர்கள் வரவில்லை , எதிரிகளை சேர்ந்த ஆட்கள் தான் அடிக்க வந்தார்கள். எதிரிகள் யாரும் என்னையோ என் மகனையோ, என் மனைவியையோ , என் மருமகளையோ அடிக்கவில்லை என்றாலும் வேறு ஊர்காரர்கள் தான் எங்களை அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் தான் அடித்தார்கள். ஜாதி பிரச்சனையில் இருந்து தப்பிக்க தான் அடிபட்டதாக சொல்லி மருத்துவமணையில் சேர்ந்தோம் என்றால் சரியல்ல, ஜாதி பிரச்சனையே இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மனோகரன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC .No.65 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO. 3**

| | | | |
|---|---|---|---|
| Name: | பத்மாவதி | Calling: | இல்லதரசி |
| Husband's Name: | மனோகரன் | Religion: | |
| Village: | ராமநாயக்கன்பேட்டை | Age: | 61 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.10.2025

( எதிரிகள் ஆஜர் .)

அ.சா.3 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இதற்கு முன்பு நீதிமன்றத்தில் கூறிய முதன்மை விசாரணையில் கூறியதைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் ஆமாம்.எனக்கு ஏற்கனவே விபத்து ஏற்பட்டு அடிக்கடி மயக்கம் வரும் என்றால் இல்லை, மாத்திரை மட்டும் தான் எடுத்துக்கொள்வேன். எனக்கு விபத்து ஏற்பட்டு அடிக்கடி மயக்கம் வருவதால் தான் நான் கீழே விழுந்து எனது வளையல்கள் உடைந்தது என்றால் சரியல்ல, அடித்து தான் கீழே விழுந்தேன். சம்பவயிடத்தில் பெண்கள் இருந்தார்களா என்றால் இல்லை, 50 க்கும் மேற்பட்ட ஆண்நபர்கள் இருந்தார்கள். அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல, அவர்கள் தான் அடித்தார்கள்.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) பத்மாவதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K